

# கலைஞரும் நானும் 22

**“முத்தமிழறிஞர் கலைஞர் குறித்து, நினைவுகூர ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. என்னுடைய பேச்சையும் எழுத்தையும் மிகவும் விரும்புவார். ரசிப்பார். நான் நன்றாக இருக்கவேண்டும் என அக்கறை காட்டுவார். பார்க்கும் ஒவ்வொரு முறையும் ‘நல்லா இருக்கியா, வசதியா இருக்கியா? என அணுக்கமாக விசாரிப்பார்’’ என கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார் ஆன்மிகச் சொற்பொழிவாளர் சுகிசிவம்.**

**■ சுகிசிவம், ஆன்மிகச் சொற்பொழிவாளர்**





# “சிறுவனல்ல... சிறுத்தைக் குட்டி..!”

“முதன்முதலில் முத்தமிழறிஞர் கலைஞரோடு எனக்கு ஏற்பட்ட தொடர்பு என்றைக்கும் மறக்க முடியாதது. அப்போது, நான் கல்லூரி மாணவனாக இருந்தேன். கலைஞர் தலைமையில் நடைபெறும் கவியரங்க நிகழ்ச்சி ஒன்றில், முனைவர் அவ்வை நடராசன் என்னையும் மேடையேற்ற நினைத்தார். ஆனால், அன்றைக்குப் பார்த்து அவருக்கு வேறு வேலை வரவே, கலைஞரோடு இருக்கும் கவிஞர் கருணானந்தம் அவர்களிடம், என்னையும் மேடையேற்றுமாறு கேட்டுக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

## கலைஞர் மேடையில் கிடைத்த பேறு!

நிகழ்வுக்குத் தலைமை வகித்த கலைஞர், கவிஞர்கள் குறித்து சிறுகுறிப்பு கொடுத்து கவிதை பாட அழைத்தார். எனது பெயரை அழைத்தபோது, என்னைக் குறித்து, குறிப்பு எதுவும் கொடுக்கவில்லை. தவிர, சின்னப் பையனாகவும் இருந்ததால் “சுகிசிவம் கவிதை வாசிப்பார்” என்று மட்டும் குறிப்பிட்டார். நான் எனது கவிதையைத் தொடங்கிய போது, கலைஞர் குறித்து இரண்டு வரிகளை முதலில் வாசித்தேன்.

**“நீ ஒரு புதிய பூகோளம்**
**முன்பக்கம் பார்த்தால் உதயசூரியன்,**
**பின்பக்கம் பார்த்தால் பூரணச் சந்திரன்”**
எனக் குறிப்பிட்டேன்.

அதைக் கேட்டதும் அவர் முகத்தில் லேசான புன்னகை எட்டிப் பார்த்தது. நான் தொடர்ந்து கவிதை படித்துக் கொண்டிருந்த போது கைதட்டல்கள் எழுந்த வண்ணம் இருந்தன. ஒரு சில நிமிடங்களில் என்னை நிறுத்தச் சொல்லிவிட்டு எழுந்த அவர், “நீ சிறுவன் என்று ஏமாந்தேன்... ஆனால், நீ சிறுத்தைக் குட்டி!” எனப் பாராட்டி, தொடர்ந்து வாசிக்க ஊக்கம் அளித்தார். நான் மேடைகளில் வளர்ந்து வருவதற்கு கலைஞரின் ஆசி, எனக்கு அவரது மேடையிலேயே கிடைத்தது என்பது நான் பெற்ற பேறு.

அந்த நிகழ்வுக்குப் பின்னர் கலைஞர் தலைமையில் நடக்கும், எந்தக் கவியரங்கமாக இருந்தாலும், எனது பெயரையும் கலைஞர் சேர்க்கச் சொல்லி இருக்கிறார். பூம்புகார் நகரை மறுநிர்மாணம் செய்தபோது நடந்த **‘இந்திர விழா’** கவியரங்கத்துக்குக்கூட மறக்காமல் என்னை அழைத்திருந்தார்.

## சோலையில் நீங்கள் மான்கள்!

ஒருமுறை சென்னை கம்பன் கழக விழாவில் நடைபெற்ற சம்பவத்தை, கலைஞரின் ஆளுமைக்கும் அன்புக்கும் சான்றாகச் சொல்வேன். அதில் கலைஞர் தலைமையில் இலக்கியச் சோலை என ஒரு நிகழ்வு. **நீதியரசர் மு.மு.இஸ்மாயில்** வரவேற்புரை ஆற்றினார். அந்த நிகழ்ச்சியின் மேடையில் அவர்கள் இருவருக்கு மட்டும் வெண்கொற்றக் குடையுடன் சிம்மாசனம் போல நாற்காலி போடப்பட்டிருந்தது. பேசுகிற மற்ற எல்லோருக்கும் கீழே மனைப்பலகை போட்டு மயிலாசனத்தில் அமர ஏற்பாடு.

நான் திராவிடர் கழகத்தில் இல்லையென்றாலும், சுயமரியாதைக்காரன் என்பதால், இந்த ஏற்பாட்டுக்கு இணங்கவில்லை. அதனால் மேடை ஏற மாட்டேன் என மறுத்தபோது, முனைவர் சரஸ்வதி ராமநாதன், முனைவர் சாரங்கபாணி ஆகியோர் கட்டாயப்படுத்தி அமரச் செய்தனர். அதே கோபத்துடன் மேடை ஏறிய நான், எனது உரையைத் தொடங்குவதற்கு முன்னர், நீதியரசரைப் பார்த்து “நீங்கள் நீதியரசர், உங்களுக்கு ஒரு சிம்மாசனம்!”, கலைஞரைப் பார்த்து “நீங்கள் நில அரசர் உங்களுக்கு ஒரு சிம்மாசனம்!”, என்று சொல்லிவிட்டு, “நான் சொல்லுக்கு அரசன், எனது சிம்மாசனம் எங்கே? மேடையில் இருக்கை போட இடம் இல்லையா? அல்லது உங்களுக்கு மனம் இல்லையா?” எனக் கேட்டேன்.

நீதியரசர் பதற்றமாகி பதில் சொல்ல எழுந்தார். கலைஞர் அவரது கையைப் பிடித்து அமர வைத்து, “நான் பார்த்துக் கொள்கிறேன்” என பதற்றத்தைத் தணித்தார். பின்னர், உரையாற்ற எழுந்த கலைஞர், “தம்பி இந்த நிகழ்வுக்குப் பெயர் **இலக்கியச் சோலை**. சோலையில் அணில்கள், மரங்களில் விளையாடும். மான்கள், தரையில் விளையாடும். சோலைக்குள் ஏது உயர்வு தாழ்வு. அதுபோல நமக்குள்ளும் கிடையாது. நாங்கள் அணில் போல. நீங்கள் மான்கள் போல” என இலக்கிய நயத்துடன் விளக்கம் கொடுத்து, எந்தச் சூழ்நிலையையும் கையாளும் உயரிய பண்பாளராக நின்றார்.

> **“சிறு பிழை என கடந்து செல்வதோ, அதைப் பூசி மெழுகுவதோ கலைஞரிடம் காணக் கிடைத்ததே இல்லை”.**

## ஒன்றிய அரசின் தாமதம்

காரைக்குடி கம்பன் கழக நிகழ்ச்சிக்கு ரயிலில் வந்தார் கலைஞர். நிகழ்ச்சிக்குத் தாமதமாக வந்தால் **கம்பனடிப்பொடி சா.கணேசன்** ஏற்றுக்கொள்ளவே மாட்டார் என்பதால், கலைஞர் ரயிலிலேயே குளித்துவிட்டுத் தயாராகி வந்தார். அவர் அரங்குக்குள் நுழைந்த நேரத்தில், நிகழ்ச்சி தொடங்கிவிட்டது.

கணேசனுடைய இயல்பை அறிந்த கலைஞர், தனது தாமதத்துக்குக் காரணத்தைக் கூறுகையில், “எனது தாமதத்துக்கு நான் காரணம் அல்ல. குறிப்பாக மாநில அரசு காரணம் அல்ல. ஒன்றிய அரசுதான் காரணம்” என, ரயில் தாமதமானதைக் கூறி அந்த இடத்தைக் கலகலப்பாக்கினார். இதுபோல பல விஷயங்களை நண்பர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

சென்னை வானொலியில், ஓர் உரையின்போது திருக்குறளில் ஒரு வரியைத் தவறுதலாகக் கூறியிருக்கிறார். ஒலிப்பதிவுக்குப் பின்னர் அது தெரிந்ததும், ‘மீண்டும் ஒலிப்பதிவு செய்யலாம்’ என எந்தத் தயக்கமுமின்றி நின்றவர் கலைஞர் என எனது நண்பர் சுந்தர ஆவுடையப்பன் என்னிடம் கூறி இருக்கிறார். சிறு பிழை என கடந்து செல்வதோ, அதைப் பூசி மெழுகுவதோ கலைஞரிடம் காணக் கிடைத்ததே இல்லை. எவ்வளவு உயரத்தில் இருந்தாலும், அதே பண்புடன், சரியானதை மட்டுமே செய்ய வேண்டும் என்கிற முனைப்பு கலைஞரிடம் இருந்ததைக் காண முடியும்.

## கட்டுரைக்குக் கிடைத்த பாராட்டு

ஒரு முறை **‘கல்கி’ தீபாவளி மலரில்** ஒரு கட்டுரை எழுதி இருந்தேன். அதைப் படித்துவிட்டு கவிஞர் வைரமுத்துக்கு போன் செய்து, “அந்தக் கட்டுரையைப் படிச்சிட்டீங்களா?” எனக் கேட்டதுடன், அதில் குறிப்பிட்ட பகுதியை ரசித்துப் பேசி இருக்கிறார். அவர் என்னை அழைத்து கலைஞர் ரசித்த விவரத்தைப் பகிர்ந்து கொண்டார். அந்தக் கட்டுரையை ‘முரசொலி’யிலும் வெளியிட்டு என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார் கலைஞர். பிற்பாடு என்னைப் பார்க்கும் பொழுது அந்தக் கட்டுரையை வெகுவாகச் சிலாகித்தார்.

சந்திக்கும் ஒவ்வொரு முறையும் அக்கறையுடன் விசாரிப்பதுடன், “ஏதாவது வேணும்னா வந்து பாருங்க” என்பார். எனக்கு அப்படி ஒரு தேவை எழவில்லை என்பதால், அவரிடம் கோரிக்கைகளுடன் சென்றதில்லை. ஆனால், தமிழுக்கும் தமிழருக்கும் அவர் செய்திருப்பவை எல்லாம் என்னைப் போன்றவர்களுக்கு மகிழ்விப்பவைதானே!

கடவுள் வாழ்த்துப் பாடிக்கொண்டிருந்த இடத்தில், **‘தமிழ்த்தாய் வாழ்த்து’** என்பதைக் கொண்டு வந்து நிறுத்தினார். தமிழாசிரியர்கள் தகுதி கொண்டவர்களாக இருந்தாலும் தலைமையாசிரியர்களாக உயர முடியாது என்பதைத் தகர்த்து தமிழாசிரியர்களையும் தலைமையாசிரியர்களாக்கினார். இதையெல்லாம் தமிழாசிரியர்களும் தமிழர்களும் என்றைக்கும் மறக்க முடியாது.

‘எல்லாமே பிறப்பினால் வருவது’ என சொல்லிக் கொண்டிருந்த சமூகத்தில், அவர் நடத்திய போராட்டங்களே - சட்டப் போராட்டங்களே, சமூக நீதியின் வரலாறாக உள்ளதை, சிந்திப்பவர்கள் யாராலும் மறுக்க முடியாது!”

**...பகிர்வார்கள்**

## போதி -30



தமிழில் வரலாற்றுக்கென வெளிவரும் மாத இதழ் ‘போதி’. நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார் நடத்தும் இந்த இதழ், கடந்த 2005-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு இரண்டு இதழ்களுடன் நின்றது. அதன்பின்னர் கடந்த 18 ஆண்டுகளாக அவ்வப்போது வெளிவந்து கொண்டிருந்தது. தற்போது வெளியாகியுள்ள 30-வது இதழ் **‘சபால்டர்ன் ஸ்டடீஸ்’** என்கிற விளிம்பு நிலை ஆய்வு முறையை அறிமுகம் செய்த வரலாற்று அறிஞர் **ரணஜித் குஹா** சிறப்பிதழாக வந்துள்ளது.

**‘சாதி மறுப்பு வரலாறு’, ‘விளிம்பு நிலை மக்களின் வரலாறு’** என இதுவரை பதிவு செய்யப்படாத வரலாறுகள் பதிவு செய்யப்படவேண்டும். **‘வரலாற்றெழுதியல்’** குறித்த புரிதலை உண்டாக்க வேண்டும். எழுதப்பட்ட வரலாறுகளைப் புரிந்துகொள்வதற்கான விமர்சனக் கண்ணோட்டத்தை உருவாக்கவேண்டும் என்பதே இந்த இதழின் நோக்கம் என்கிறார் ரவிக்குமார். தமிழ்நாட்டில், வரலாறு குறித்த பார்வையை இந்த இதழ் விசாலப்படுத்தும் என நம்புகிறார். வாசிப்பு வளம் சேர்க்கட்டும்.

## :ப்ளாஷ்பேக்



## ‘அவரா?’ என்றார்!



செல்வம்

1994-ஆம் ஆண்டு, செப்டம்பர் 11-ஆம் தேதி, திருச்சி மாவட்டம், மணப்பாறையில் கழகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்தோம். தலைவர் கலைஞர் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார். அப்போது, எனது தந்தை நகரச் செயலாளராக இருந்தார். கூட்டத்தை ஏற்பாடு செய்த எங்களைப் பாராட்டி, சால்வை அணிவித்த தலைவர், என்னைப் பார்த்து “மு.மலையாளம் மகனா..?” என்று கேட்டார். சிறு நகரத்தின் நகரச் செயலாளர் பெயர் வரை அவர் அறிந்து வைத்திருந்ததை நினைத்துப் பெருமையாக இருந்தது. இந்த நிகழ்ச்சி என் வாழ்வில் மறக்க முடியாதது.

**-மு.ம.செல்வம், நகர தி.மு.க.செயலாளர், மணப்பாறை, திருச்சி**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### முதல் பொதுத்தேர்தல்!

**1951-ஆம் ஆண்டு நவம்பரில், கழகத்தின் பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் மதுரையில் பேரறிஞர் அண்ணா தலைமையில் கூடியது. 1952-ல், இந்தியாவில் முதல் பொதுத்தேர்தல் நடத்தும் ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதையடுத்து, தேர்தலை எதிர்கொள்வது குறித்தும் கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள், செயல்முறைகள் பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. காலையில் கூடிய பொதுக்குழு மறுநாள் காலையில் தான் முடிவுற்றது. அந்தத் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவதில்லை எனவும், கழகத்தின் ஆதரவு பெற்ற வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிப்பது என்றும் முடிவு செய்யப் பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 145




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131